(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 128.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2026 பெப்ரவரி 05, வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

கௌரவ **நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க குணசேகர,** நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

கௌரவ **கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

கௌரவ **சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதார பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

கௌரவ **உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **அரவிந்த செனரத்,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ **தினிந்து சமன் ஹென்னாயக்க,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம

கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ

கௌரவ எம்.கே. எம். அஸ்லம்

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ உபுல் கித்சிறி

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ வசந்த புஷ்ப குமார

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ மனோ கணேசன்

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ கயான் ஜனக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ அமில பிரசாத்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நந்த பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ ஜகத் விதான

கௌரவ அதுல வெலதகொட

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்

கௌரவ திலிண சமரகோன்

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2026 பெப்ரவரி 03 ஆம் திகதி ‘பல்கலைக்கழகங்கள் (திருத்தம்)’ எனும் பெயரிலான சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**II**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘வாடகை (நீக்கல்)’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன் ”

**III**

“1953 ஆம் ஆண்டு 21 ஆம் எண் பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பாகம் அ இன் 7 ஆம் உருப்படியின் கீழ் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளையும் குண நலனையும் பாதிக்கும் வகையில், "பாராளுமன்றத்தில் 'ஐஸ் மற்றும் சிகரெட்டுகளை' பயன்படுத்தும் ஊழியர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை - சபாநாயகரின் உத்தரவு" என்ற தலைப்பில் அவதூறான அறிக்கையுடன் 11.01.2026 அன்று ‘இரிதா லங்காதீப’ இதழில் வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையிலிருந்து எழுந்த பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் தொடர்பான விடயம் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாகும் என்பதையும், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 146 இன் கீழ் எனது அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம், இந்த விடயம் தொடர்பான விசாரணை மற்றும் அறிக்கைக்காக ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு இதன் மூலம் பரிந்துரைக்கிறேன் என்பதையும் இந்த சபைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2(3) ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 நவம்பர் 25 ஆம் திகதிய 2464/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 திசெம்பர் 04 ஆம் திகதிய 2465/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 திசெம்பர் 31 ஆம் திகதிய 2469/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iv) (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பான தீர்மானம்

(2025 நவம்பர் 25 ஆம் திகதிய 2464/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அக்கட்டளைகள் மற்றும் தீர்மானம் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்—

(i) 2016 ஆம் ஆண்டுக்கான தேயிலை சக்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை;

(ii) 2019 ஆம் ஆண்டுக்கான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iii) 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண சபை தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் அரசாங்கக் கணக்குகள் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) வலுசக்தி அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் வலுசக்தி அமைச்சு தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்—

(i) 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான "காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் – இலங்கை" இன் ஆண்டறிக்கைகள்; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான புனர்வாழ்வுப் பணியகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்—

(i) 2023 ஆம் ஆண்டுக்கான டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான இந்துப் பண்பாட்டு நிதியத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2018 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கான தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கைகள்;

(ii) 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான காணி அளவைச் சபையின் வருடாந்த அறிக்கைகள்;

(iii) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(iv) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(v) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான கமத்தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(vi) 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(vii) 2024 ஆம் ஆண்டுக்கான கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கமத்தொழில், கால்நடை வளங்கள் பிரிவு மற்றும் முன்னர் காணப்பட்ட பெருந்தோட்டக் கைத்தொழில் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(viii) 2023 ஆம் ஆண்டுக்கான கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கமத்தொழில் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ எஸ்.எம். மரிக்கார் அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம் சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ எஸ்.எம். மரிக்கார் அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட–

(i) கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டமூலம்; மற்றும்

(ii) கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) தொம்பே, மெதலந்த, இல. 367/1 இல் வதியும் திருமதி ஜே.பி. சரசி தரங்கா ஜயசிங்கவினது 2025.07.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஹர்ஷன ராஜகருணா சமர்ப்பித்தார்.

(2) ஹற்றன், ஆரியகம, இல. 64 இல் வதியும் திரு. ஏ.கே. மஹேந்திரனினது 2025.03.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி சமர்ப்பித்தார்.

(3) கண்டி, ஹந்தான வீதி, கெமுனு மாவத்தை, இரண்டாம் ஒழுங்கை, இல. 61/154 இல் வதியும் திரு. எம்.டி சந்திரபாலவினது 2025.08.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுதத் பலகல்ல சமர்ப்பித்தார்.

(4) (i) பஸ்யால, மக்கனிகொட, இல. 40 இல் வதியும் திரு. ஆர்.ஏ.டி.ஈ. ரணதுங்கவினது 2025.06.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) வேயன்கொட, மாளிகாதென்ன, இல. 104 இல் வதியும் திரு. டப்ளியூ.ஏ. கமல்சிரியினது 2025.07.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 12.13 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத தலைமை தாங்குவாராக" என வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.16 மணிக்கு கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத தலைமை தாங்கினார்.)

"கௌரவ உபுல் கித்சிறி தலைமை தாங்குவாராக" என தொழில் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.40 மணிக்கு கௌரவ உபுல் கித்சிறி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

தலைமைத்தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் மற்றும் 2 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

3 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "அத்துடன் நிறுவகத்தின் உறுப்பாண்மையை பெற்றுக்கொண்டதன் மேல் நிலையான சொத்து உயர்தொழிலர்களை நிரலிற் சேர்த்தல் மற்றும் பதிவுசெய்தல் என்பவற்றை வசதிப்படுத்துவதன் மூலம் உயர்தொழிலின் பயனுறுதன்மையை";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 30 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(ஆ) நிறுவகத்தின் உறுப்பினர்களை நிரலிற் சேர்த்தலும் பதிவுசெய்தலும்;"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 36 ஆம் மற்றும் 37 வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "அமைவாகவும் நிறுவகத்தின் உறுப்பினர்களாக சேர்ப்பு செய்யப்பட்டு பதிவு செய்யப்படலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்” என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 2 வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“அவரை நிரலிலிருந்து அகற்றுவதற்கான மற்றும் பதிவை இரத்துச் செய்வதற்கான தத்துவத்தைக்;”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“10 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“அகற்றுவதற்கும் பதிவை இரத்துச் செய்வதற்கும் பதிலாக பேரவை தகுதியானதெனக்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“10 ஆம் பக்கத்தில் 9 முதல் 22 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“ஆயின் மேலும் நிரலிலிருந்து அகற்றுதல் மற்றும் பதிவை இரத்துச் செய்தல் என்பன அவர் மீள் நிரலிற் சேர்ப்பதற்கும் மீளப் பதிவு செய்வதற்கும் தகுதியுடையவரென திருப்திப்படின், அத்தகைய ஆளை பேரவை அடுத்துறும் நிரலிற் சேர்ப்பதற்கும் மீளப்பதிவு செய்விதிலிருந்தும் தடுத்தலாகாது.

(3) நிறுவகத்தின் உறுப்பினர் எவரும், அத்தகைய உறுப்பினர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பேரவையின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு தகுதியீனமற்றவராக வந்துள்ளார் என்றும் உயர்தொழில்சார் துர்நடத்தையைப் புரிந்துள்ளார் என்றும் விசாரணையின் பின்னர் பேரவைக்கு அறிக்கையொன்று, 18 ஆம் பிரிவின் கீழான பேரவையால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்று குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலொழிய, நிரலிலிருந்து அகற்றப்படுதலோ மற்றும் அவருடைய பதிவை இரத்துச் செய்தலுக்கு உள்ளதாலோ அல்லது உறுப்பாண்மையிலிருந்து இடைநிறுத்தப்படுதலோ ஆகாது.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“10 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“மற்றும் உறுப்பாண்மையிலிருந்து பதிவு இரத்துச் செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம்

"12 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அத்தரத்தின் நிரலில் சேர்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆட்களின்;"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம்

14 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"மேல் மற்றும் பதிவு இரத்துச் செய்யப்பட்டதன்மேல் அல்லது இடைநிறுத்தப்பட்டதன்மேல்,"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் வாசகம்

15 ஆம் பக்கத்தில் 35 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"படுதலோ மற்றும் பதிவு இரத்துச் செய்யப்படுதலுக்கமைதலோ அல்லது இடைநிறுத்தப்படுதலோ ஆகாது.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 முதல் 31 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**அட்டவணை**

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பின்வரும் திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "சேர்த்துக்கொள்ளப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சேர்த்துகொள்ளப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"அட்டவணை திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகம்

"சட்டமாக்குவாசகம் சட்டமூலத்தின் திருத்தப்பட்டவாறு ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விரிவுப் பெயர்

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பின்வரும் திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "உயர்தொழிலர்கள் நிறுவகத்தை தாபிப்பதற்கும்;" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக "உயர்தொழிலர்கள் நிறுவகத்தை தாபிப்பதற்கும்; நிறுவகத்தின் உறுப்பினர்களை நிரலில் சேர்த்து பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"விரிவுப் பெயர் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டப்பெயர்

"சட்டப்பெயர் சட்டமூலத்தின் திருத்தப்பட்டவாறு ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக" என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**6. கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

தலைமைத்தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 முதல் 19 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

20 ஆம் வாசகம்

15 ஆம் பக்கத்தில் 19 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டு அப்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்டவாறான, குறித்துரைக்கப்பட்ட ஒரு துறைமுகத்தினுள்ளான கொள்கல முடிவிடமொன்று தவிர்ந்த இலங்கையில் கொள்கல முடிவிட, கொள்கல"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக" என துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**7. கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

தலைமைத்தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 முதல் 6 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**8. ஒத்திவைப்பு**: “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 6.01 மணிக்கு தலைமைத்தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2026 பெப்ரவரி 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.